# தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்ககம்

## அரசு/அரசு உதவிபெறும்/தனியார் பள்ளி மாணவ, மாணவியருக்கான பாரதியார் தின (BDG), குடியரசு தின (RDG) பழைய, புதிய மற்றும் தடகள (RDS) விளையாட்டுப்போட்டிகள் நடத்துவதற்கான

## 2026 – 2027 ஆம் கல்வியாண்டுக்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்

### உடற்கல்வித்துறையின் விளையாட்டுப் போட்டிகள் அறிமுகம்

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் அனைத்துவகைப் பள்ளிகளிலும் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை கற்பிக்கப்படும் ஏனைய பாடங்களினால் மாணவ, மாணவியர்களுக்கு கிடைக்கப்பெற்ற அறிவுதிறனை ஆய்வுகள் செய்திட பயன்படுத்தப்படும் தேர்வு முறைகளைப் போலவே, உடற்கல்வி இயக்குநர்கள், உடற்கல்வி ஆசிரியர்களை கொண்டு கற்பிக்கப்படும் உடற்கல்வியியல் மூலமாக மாணவ, மாணவியர்களுக்கு கிடைக்கப்பெற்ற உடற்திறன்களை ஆய்வுகள் செய்யும் விதமாக ஒவ்வொரு கல்வியாண்டிலும் பாரதியார் தின (BDG), குடியரசு தின (RDG) விளையாட்டுப் போட்டிகள் அரசினால் நடத்தப்பட்டு வருகிறது.

இப்போட்டிகளில் பள்ளி மாணவ, மாணவியர்களை கலந்து கொள்ளச் செய்திட ஏதுவாக அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விளையாட்டுக்களில் பள்ளிகளில் பணியாற்றும் உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் தங்களிடம் பயிலும் மாணவ, மாணவியர்களின் உடற்திறன்களை கண்டறிந்து அவர்களின் உடற்திறன்களுக்கு ஏற்ப விளையாட்டுகளை தெரிவு செய்து, விளையாட்டுக்கள் சார்ந்த உரிய பயிற்சிகளை வழங்கி பள்ளியளவிலிருந்து தேசிய அளவு வரை நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் செய்திட வேண்டும்.

**1. அனைத்துப் பள்ளிகளும் பங்கேற்பு செய்தல்**

இப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெறும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் விளையாட்டுச் சான்றிதழ்களுக்கு (Sports Certificates) மாநில அரசு மருத்துவக் கல்லூரிகள், அண்ணா பல்கலைக் கழகக் கல்லூரிகள், வேளாண் பல்கலைக் கழகக் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உயர்கல்வி பயில முன்னுரிமை வழங்கப்படுவதால் அனைத்துப்பள்ளிகளும் கட்டாயம் (பிற வாரிய பள்ளிகள் தவிர்த்து) கலந்துகொள்ள வேண்டும்.

- பள்ளி மாணவ, மாணவியர்கள் பயிலும் வகுப்புகளைப் பொருட்படுத்தாமல், விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க உரிய வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். அவ்வாறு மறுக்கப்படும் பட்சத்தில் அதற்கு சார்ந்த பள்ளித்தலைமையாசிரியரே பொறுப்பாளராவார்.
- பள்ளி அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் திறன்மிக்க மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு குறுவட்டம் முதல் மாநில அளவிலான போட்டிகள் வரை சார்ந்த பள்ளியின் உடற்கல்வித் துறையினால் சிறப்புபயிற்சிகள் வழங்கபடவேண்டும்.

♦ பள்ளிகளில் மாணவிகளுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் உடற்கல்வித்துறை பெண் ஆசிரியர் கொண்டு வழங்கப்பட வேண்டும். உடற்கல்வித்துறை பெண் ஆசிரியர் இல்லாத பட்சத்தில் மற்ற பாட பெண் ஆசிரியை உடன் இருப்பதை சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்.

2. போட்டிகள் விவரம்

| பாரதியார் தின பழைய விளையாட்டுப் போட்டிகள் (BDG) | குடியரசு தின பழைய விளயாட்டுப் போட்டிகள் (RDG) | குடியரசு தின / தடகளப் போட்டிகள் (RDS) | பாரதியார் தின/குடியரசு தின புதிய விளையாட்டுப் போட்டிகள் (BD/RD New Games Competitions) |
|---|---|---|---|
| 19 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்படும் போட்டிகள். (Group A Competitions) | 14 மற்றும் 17 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்படும் போட்டிகள். (Group A Competitions) | 14,17, மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்படும் போட்டிகள். (Group C Competitions) | 14, 17, மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்படும் போட்டிகள். (Group B & D) |

3. **பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பழைய விளையாட்டுப் போட்டிகள்.**

(Group A Competitions)

| | | | |
|---|---|---|---|
| 1 | கால்பந்து (Foot ball) | 7 | கைப்பந்து (Handball) |
| 2 | வளைகோல்பந்து (Hockey) | 8 | எறிபந்து (Throwball) |
| 3 | கூடைப்பந்து (Basketball) | 9 | பூப்பந்து (Ball Badminton) |
| 4 | கையுந்துபந்து (VolleyBall) | 10 | இறகுப்பந்து (Badminton) |
| 5 | கோ– கோ (Kho–Kho) | 11 | மேசைப்பந்து (Table Tennis) |
| 6 | கபடி (Kabbadi) | 12 | டென்னிஸ் (Tennis) |

4. பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டுப் போட்டிகள்.

(Group B Competitions)

| | | | |
|---|---|---|---|
| 1 | நீச்சல் (Swimming) | 7 | ஸ்குவாஷ் (Squash) |
| 2 | டேக்வாண்டோ(Taekwondo) | 8 | கேரம்(Carrom) |
| 3 | ஜூடோ (Judo) | 9 | கடற்கரைகையுந்துபந்து (Beach Volleyball) |
| 4 | குத்துச்சண்டை (Boxing) | 10 | வளையபந்து (Tennikoit) |
| 5 | வாள்சண்டை (Fencing) | 11 | சாலைமிதிவண்டி (RoadCycling) |
| 6 | ஜிம்னாஸ்டிக் (Gymnastic) | 12 | சிலம்பம்( Silambam ) |

5. குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS)

(Group C Competitions)

| 14 வயதிற்குட்பட்டவர்கள் | | 17 வயதிற்குட்பட்டவர்கள் | | 19 வயதிற்குட்பட்டவர்கள் | |
|---|---|---|---|---|---|
| 1 | 100 மீ ஓட்டம் | 1 | 100 மீ ஓட்டம் | 1 | 100 மீ ஓட்டம் |
| 2 | 200 மீ ஓட்டம் | 2 | 200 மீ ஓட்டம் | 2 | 200 மீ ஓட்டம் |
| 3 | 400 மீ ஓட்டம் | 3 | 400 மீ ஓட்டம் | 3 | 400 மீ ஓட்டம் |
| 4 | 600 மீ ஓட்டம் | 4 | 800 மீ ஓட்டம் | 4 | 800 மீ ஓட்டம் |
| 5 | 80 மீ தடை தாண்டும் ஓட்டம் | 5 | 1500 மீ ஓட்டம் | 5 | 1500 மீ ஓட்டம் |
| 6 | நீளம் தாண்டுதல் | 6 | 3000 மீ ஓட்டம் | 6 | 3000 மீ ஓட்டம் |
| 7 | உயரம் தாண்டுதல் | 7 | 100/110 மீ தடை தாண்டும் ஓட்டம் | 7 | 100/110 மீ தடை தாண்டும் ஓட்டம் |
| 8 | குண்டு எறிதல் | 8 | 400 மீ தடை தாண்டும் ஓட்டம் | 8 | 400 மீ தடை தாண்டும் ஓட்டம் |
| 9 | வட்டு எறிதல் | 9 | உயரம் தாண்டுதல் | 9 | உயரம் தாண்டுதல் |
| 10 | 4X100 தொடரோட்டம் | 10 | நீளம் தாண்டுதல் | 10 | நீளம் தாண்டுதல் |
| | | 11 | மும்முறை தாண்டுதல் | 11 | மும்முறை தாண்டுதல் |
| | | 12 | கோல் ஊன்றி தாண்டுதல் | 12 | கோல் ஊன்றி தாண்டுதல் |
| | | 13 | குண்டு எறிதல் | 13 | குண்டு எறிதல் |
| | | 14 | வட்டு எறிதல் | 14 | வட்டு எறிதல் |
| | | 15 | ஈட்டி எறிதல் | 15 | ஈட்டி எறிதல் |
| | | 16 | 4 x 100 மீ தொடர் ஓட்டம் | 16 | 4 x 100 மீ தொடர் ஓட்டம் |
| | | 17 | 4 x 400 மீ தொடர் ஓட்டம் | 17 | 4 x 400 மீ தொடர் ஓட்டம் |

**அளவீடுகள்**

| போட்டிகள் | மாணவர்கள் | மாணவிகள் |
|---|---|---|
| 80 மீ தடை தாண்டும் ஓட்டம் | 0.762 மீ | 0.762 மீ |
| 100 மீ தடை தாண்டும் ஓட்டம் | – | 0.762 மீ |
| 110 மீ தடை தாண்டும் ஓட்டம் | 0.914 மீ | |
| 400 மீ தடை தாண்டும் ஓட்டம் | 0.84 மீ | 0.762 மீ |
| குண்டு எறிதல் | 14 வயதுகுட்பட்டவர்கள் – 4 கிலோ<br>17 / 19 வயதுகுட்பட்டவர்கள் – 5 கிலோ | 3 கிலோ |
| வட்டு எறிதல் | 14 வயதுகுட்பட்டவர்கள் – 1 கிலோ<br>17 / 19 வயதுகுட்பட்டவர்கள் – 1.5 கிலோ | 1 கிலோ |
| ஈட்டி எறிதல் | 700 கிராம் | 500 கிராம் |

**6 சதுரங்கப் போட்டிகள்**

**(Group D Competitions)**

11, 14, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்படும் போட்டிகள்.

**7. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியர்களின் நிர்ணயிக்கப்பட்ட வயதுப்பிரிவு மற்றும் பயிலும் வகுப்பு**

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து வகையான நடுநிலைப்பள்ளிகள். உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள் இவ்விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கத் தகுதியானவர்கள். தொடக்கப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள் சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்கத் தகுதியானவர்கள்.

| வ.எண் | வயதுப் பிரிவு | வகுப்புகள் |
|---|---|---|
| 1 | 11 வயதிற்குட்பட்ட மாணவ / மாணவிகள் | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை |
| 2 | 14 வயதிற்குட்பட்ட மாணவ / மாணவிகள் | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை |
| 3 | 17வயதிற்குட்பட்ட மாணவ / மாணவிகள் | 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை |
| 4 | 19 வயதிற்குட்பட்ட மாணவ / மாணவிகள் | 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை |

8. ஒரு பள்ளியிலிருந்து 14/17/19 என ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர் அணிகள் மற்றும் அணி வீரர்களின் எண்ணிக்கை

| வ. எண் | பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப்போட்டிகள் (BDG / RDG) | அணி வீரர்கள் | ஒரு வயது பிரிவில் |
|---|---|---|---|
| 1 | கால்பந்து (Football) | 18 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 2 | வளைகோல்பந்து (Hockey) | 18 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 3 | கூடைப்பந்து (Basketball) | 12 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 4 | கையுந்துபந்து (Volleyball) | 12 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 5 | கோ– கோ (Kho –Kho) | 12 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 6 | கபடி (Kabaddi) | 12 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 7 | கைப்பந்து (Handball) | 16 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 8 | எறிபந்து (Throwball) | 12 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 9 | பூப்பந்து (Ball Badminton) | 10 | ஒரு மாணவர் அணி & மாணவியர் அணி |
| 10 | இறகுப்பந்து (ஒற்றையர்) Badminton – Singles | 1 | ஒரு மாணவர் & மாணவியர் மட்டும் |
| | இறகுப்பந்து (இரட்டையர்) Badminton – Doubles | 2 | இரு மாணவர்கள் & மாணவியர்கள் அணி |
| 11 | மேசைப்பந்து (ஒற்றையர் ) Table Tennis – Singles | 1 | ஒரு மாணவர் & மாணவியர் மட்டும் |
| | மேசைப்பந்து (இரட்டையர்) Table Tennis – Doubles | 2 | இரு மாணவர்கள் & மாணவியர்கள் அணி |
| 12 | டென்னிஸ் (ஒற்றையர் ) Tennis – Singles | 1 | ஒரு மாணவர் & மாணவியர் மட்டும் |
| | டென்னிஸ் (இரட்டையர்) Lawn Tennis – Doubles | 2 | இரு மாணவர்கள் & மாணவியர்கள் அணி |

| வ. எண் | பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் (BD / RD Competitions) | அணி வீரர்கள் | ஒரு வயது பிரிவில் |
|---|---|---|---|
| 1 | நீச்சல் (Swimming) | 2 | ஒரு போட்டிக்கு 2 மாணவர்கள் & 2 மாணவிகள் மட்டும். தொடர் ஓட்டம் 4 + 1 ( Reserve ) (ஒருவர் 3 தனி நபர் போட்டிகள் & 2 தொடர் நீச்சல் போட்டிகளில் |

| | | | |
|---|---|---|---|
| | | | பங்கேற்கலாம்) |
| 2 | டேக்வாண்டோ (Taekwondo) | 1 | ஒவ்வொரு எடை பிரிவிலும் ஒருவர் மட்டும் |
| 3 | ஜூடோ (Judo) | 1 | ஒவ்வொரு எடை பிரிவிலும் ஒருவர் மட்டும் |
| 4 | குத்துச்சண்டை (Boxing) | 1 | ஒவ்வொரு எடை பிரிவிலும் ஒருவர் மட்டும் |
| 5 | ஜிம்னாஸ்டிக் (Gymnastic) | 7 | ஒரு அணி மட்டும் |
| 6 | சிலம்பம் (Silambam) | 1 | ஒவ்வொரு எடை பிரிவிலும் / ஒற்றைக் கொம்பு / இரட்டைக் கொம்பு போட்டிகளுக்கு ஒருவர் மட்டும் |
| 7 | கடற்கரை கையுந்துபந்து (Beach Volleyball) | 2+1 | மூன்று மாணவர்கள்/ மாணவியர்கள் அணி |
| 8 | சாலையோர மிதிவண்டி (Road Cycling) | 2 | ஒரு மாணவர் & மாணவியர் அணி |
| 9 | வாள்சண்டை (Fencing) | 2 | சாபர் ( Sabre ) தனிநபர் |
| | | 2 | சாபர் ( Sabre ) குழு |
| | | 2 | ஃபாயில் ( Foil ) தனிநபர் |
| | | 2 | ஃபாயில் ( Foil ) குழு |
| | | 2 | எபி ( Epeel ) தனிநபர் |
| | | 2 | எபி ( Epee ) குழு |
| 10 | ஸ்குவாஷ் – ஒற்றையர் Squash – Singles | 1 | ஒரு மாணவர் / மாணவி |
| | ஸ்குவாஷ் – இரட்டையர் Squash – Doubles | 2 | இரு மாணவர்கள்/மாணவியர்கள் அணி |
| 11 | கேரம் – ஒற்றையர் Carrom Singles | 1 | ஒருவர் மாணவர் / மாணவி |
| | கேரம் – இரட்டையர் Carrom – Doubles | 2 | இரு மாணவர்கள்/மாணவியர்கள் அணி |
| 12 | வளையபந்து – ஒற்றையர் Tennikoit Singles | 1 | ஒருவர் மாணவர் / மாணவி |
| | வளையபந்து – இரட்டையர் Tennikoit – Doubles | 2 | இரு மாணவர்கள்/மாணவியர்கள் அணி |

| | | | |
|---|---|---|---|
| 13 | தடகளம்( Athletics ) | 2 | ஒவ்வொரு Event 2 – மாணவர்கள் / மாணவிகள் மட்டும். தொடர் ஓட்டம் 4 + 1 ( Reserve ) ( ஒருவர் 3 – தனி நபர் போட்டிகள் & 2 – தொடர் ஓட்ட போட்டிகளில் பங்கேற்கலாம். ) |
| 14 | சதுரங்கம் ( CHESS ) | 2 | ஒவ்வொரு வயது பிரிவிலும் வட்டார அளவிலான போட்டிகளுக்கு ஒரு பள்ளியிலிருந்து இருவர் மட்டும். |

**குறிப்பு** : மாணவ, மாணவியர்கள் தங்களது நுழைவுப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எடைப் பிரிவில் மட்டுமே கலந்துகொள்ளமுடியும்.எடைக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருப்பின் அவர்களுக்கு அடுத்தநிலை போட்டியில் பங்கேற்க அனுமதி மறுக்கப்படுவதுடன், பங்கேற்புச் சான்றிதழும் வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

**9. பாரதியார் தின, குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நிலைகள்**

- வட்டார அளவில் (சதுரங்கம் மட்டும்)
- குறுவட்ட அளவில்
- வருவாய் மாவட்ட அளவில்
- மாநில அளவில்

**வட்டார அளவிலான சதுரங்கப் போட்டிகள் (Group D Competitions)**

பள்ளி அளவிலான சதுரங்கப் போட்டிகளில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் வெற்றி பெற்ற இரண்டு மாணவ / மாணவியர்கள் வட்டார அளவிலான போட்டிகளில் பங்குபெறுவர்.

**குறுவட்ட அளவிலான போட்டிகள் (Zonal Level Competitions)**

Group A பிரிவு 11 பழைய விளையாட்டுக்கள் (டென்னிஸ் தவிர்த்து) மற்றும் Group C பிரிவு தடகளப் போட்டிகள், மேலும் Group B –யில்

1. வளையப்பந்து (Tennikolt)
2. கேரம் (Carrom)
3. சிலம்பம் (Silambam)
4. கடற்கரை கையுந்துபந்து (Beach Volleyball)
5. குத்துச்சண்டை ( Boxing )
6. டேக்வாண்டோ (Taekwondo)

**வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகள் (District Level Competitions),**

Group – A 12 பழைய விளையாட்டுக்கள், Group – B 12 புதிய விளையாட்டுக்கள், Group – C தடகளப் போட்டிகள் மற்றும் Group D சதுரங்கப் போட்டிகள் முழுமையும் மாவட்ட அளவில் நடைபெறும்.

1. Group A 12 பழைய விளையாட்டுக்களில் குறுவட்ட அளவில் முதலிடம் பெற்ற அணி வருவாய் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள்.
2. Group B புதிய விளையாட்டுக்களான 1. வளையபந்து (Tennikoit). 2. கேரம் (Carrom), 3. சிலம்பம் (Silambam) 4. கடற்கரை கையுந்துபந்து (Beach Volleyball), 5. குத்துச்சண்டை (Boxing), 6. டேக்வாண்டோ (Taekwondo) ஆகிய விளையாட்டுக்களில் குறுவட்ட அளவில் முதலிடம் பெற்ற அணிகள்/ மாணவ/மாணவியர்கள் வருவாய் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள். மீதமுள்ள 6 விளையாட்டுக்களில் வ.எண் –8 இன் அட்டவணையில் உள்ளபடி நேரடியாக மாணவ / மாணவியர்களும் பங்குபெறலாம்.
3. Group C குறுவட்ட அளவில் தடகளப் போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாமிடம், தொடர் ஓட்டப்போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவ / மாணவியர்கள் வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள்.
4. Group D சதுரங்க போட்டிகளில் வட்டார அளவிலான முதல் 3 இடங்களில் வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்கள் வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள்.

**மாநில அளவிலான போட்டிகள் (State Level Competitions)**

Group – A 12 பழைய விளையாட்டுக்கள், Group – B 12 புதிய விளையாட்டுக்கள், Group – C தடகளப் போட்டிகள் மற்றும் Group D சதுரங்கப் போட்டிகள் அனைத்தும் **மாநில** அளவில் நடைபெறும்.

1. Group A 12 பழைய விளையாட்டுக்களில் வருவாய் **மா**வட்ட அளவில் முதலிடம் பெற்ற அணி **மாநில** அளவிலான போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள்.
2. Group B புதிய விளையாட்டுக்களான 11 விளையாட்டுக்கள் (நீச்சல் தவிர்த்து (Swimming)) வருவாய் **மா**வட்ட அளவில் முதலிடம் பெற்ற அணிகள்/ மாணவ/மாணவியர்கள் **மாநில** அளவிலான போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள்.

3. Group B வருவாய் மாவட்ட அளவிலான நீச்சல் (Swimming) போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாமிடம், தொடர் நீச்சல் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவ / மாணவியர்கள் **மாநில** அளவிலான போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள்.
4. Group C வருவாய் மாவட்ட அளவில தடகளப் போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாமிடம், தொடர் ஓட்டப்போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவ / மாணவியர்கள் **மாநில** அளவிலான போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள்.
5. Group D சதுரங்கப் போட்டிகளில் வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் 3 இடங்களில் வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்கள் **மாநில** அளவிலான போட்டிகளில் பங்குபெற தகுதியானவர்கள்.
6. மாநில அளவிலான Group A பழைய விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு வயது பிரிவிற்க்கும் (U–14,U–17,U–19) நான்கு விளையாட்டுகள் ஒரு மாவட்டத்திற்கு என தனித்தனியாக ஓதுக்கீடு செய்யப்பட்டு போட்டிகள் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**10. பின்வரும் அலுவலர்கள் பல்வேறு நிலைகளில் விளையாட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்களாக செயல்படுவார்கள்.**

## பள்ளி விளையாட்டுக் குழு/School Sports Committee

| | |
|---|---|
| தலைவர் (President) | தலைமை ஆசிரியர் |
| செயலாளர் (Secretary) | உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர் (உடற்கல்வி இயக்குநர் பதவி இல்லை என்றால், மூத்த உடற்கல்வி ஆசிரியர்) |
| இணைச் செயலாளர் (Joint Secretary) | பிற உடற்கல்வி ஆசிரியர்கள் |
| உறுப்பினர்கள் (Members) | 3 – பாடஆசிரியர்கள் |
| மாணவர் உறுப்பினர்கள் | 4 – மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மாணவர்கள்<br>2 – உயர் நிலைப் பள்ளி விளையாட்டு மாணவர்கள்) |

**குறுவட்டஅளவில் / Jury of Appeal and Organising committee**

| | |
|---|---|
| நிர்வாக தலைவர் (Adminstrative President) | மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) |
| தொழில் நுட்பத் தலைவர் (Technical President) | மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் (DIPE) |
| குறுவட்டச் செயலாளர் (Zonal Secretary) | குறுவட்டப் போட்டிகள் நடத்தும் பள்ளியின் தலைமை ஆசிரியர் |
| இணைச் செயலாளர் (Joint Secretary) | போட்டிகளை நடத்தும் பள்ளியின் உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர் (உடற்கல்வி இயக்குநர் பதவி இல்லை என்றால், மூத்த உடற்கல்வி ஆசிரியர்) |
| உறுப்பினர் | உடற்கல்வி இயக்குநர் மற்றும் மூத்த உடற்கல்வி ஆசிரியர் |

**வருவாய் மாவட்ட அளவில் / Jury of Appeal and Organising committee**

| | |
|---|---|
| நிர்வாக தலைவர் (Adminstrative President) | முதன்மைக் கல்வி அலுவலர் (CEO) |
| துணைத் தலைவர் (Vice–President) | வருவாய் மாவட்டக் கல்வி அலுவலர்கள்(DEO's) (இடைநிலை, தொடக்கக் கல்வி மற்றும் தனியார் பள்ளிகள் மாவட்டக் கல்வி அலுவலர்கள்) |
| தொழில்நுட்பத் தலைவர் மற்றும் நிர்வாக செயலாளர் (Technical President & Organizing Secretary) | சார்ந்த மாவட்டஉடற்கல்விஆய்வாளர் (DIPE) |
| உறுப்பினர் | உடற்கல்வி இயக்குநர் |

**மாநில அளவிலான போட்டிகள் / Jury of Appeal and Organising committee**

| | |
|---|---|
| தலைவர் : | பள்ளிக்கல்வி இயக்குநர் |
| துணைத் தலைவர் : | பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்) |
| தொழில்நுட்ப தலைவர் : | முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் |
| செயலர் : | போட்டிகள் நடத்தக் கூடிய மாவட்டத்தின் முதன்மைகல்வி அலுவலர். |
| தொழில்நுட்ப செயலர் : | போட்டிகள் நடத்தும் மாவட்டத்தின் உடற்கல்வி ஆய்வாளர். |
| உறுப்பினர் : | முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட 2 மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள். |

**11. குறுவட்ட, மாவட்ட, மாநில செயலர்களின் செயல்பாடுகள்:**

1. விளையாட்டுப் போட்டிகள் முறையாக நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைத்து பள்ளிகளின் கடமையாகும்.
2. போட்டிகளுக்கு முன்னதாகவே விளையாட்டு மைதானத்தின் தன்மை மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஏற்பாடுகளை சரிபார்த்துக் கொள்வது போட்டிகளில் கலந்து கொள்ளும் அனைத்து பள்ளிகளின் உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களின் பொறுப்பாகும்,
3. மைதானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்து ஏதேனும் சரி செய்ய வேண்டியிருந்தால், அது போட்டி தொடங்குவதற்கு முன்னதாகவே சரி செய்யப்பட வேண்டும்.
4. தடகளப் போட்டிகள் அதிகரித்துள்ளதாலும், தகுதி பெறுபவர்களின் எண்ணிக்கை மற்றும் செலவினங்களைக் குறைப்பதற்காகவும், களப்போட்டிகளை (Field Events) வேறு மைதானத்தில் முன்னதாகவே நடத்திக் கொள்ளலாம்.
5. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவின் வழிகாட்டுதல்களுடன் போட்டி தொடங்குவதற்கு முன்னதாகவே குறைகளை சரி செய்து கொள்வது சார்ந்த (குறையை சரி செய்ய) உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியரின் பொறுப்பாகும்.

அனைத்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது மாணவகள் / மாணவியர்கள் தங்களது புகார்களை சுதந்திரமாக பதிவு செய்யும் வகையில் அவர்கள் தங்குமிடம், போட்டிகள் நடைபெறும் இடங்களில் **"மாணவர் மனசு பெட்டி"** கட்டாயம்வைக்க வேண்டும். மேலும் அரசின் **குழந்தைகள் உதவி மைய எண் 1098** **பள்ளிக் கல்வித்** துறையின் **உதவி எண் 14417** கொண்ட விழிப்புணர்வு பதாகைகள் இடம்பெற வேண்டும்.

**12. பள்ளி மாணவ, மாணவியர்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான பொதுவான விதிமுறைகள்**

ஒவ்வொரு கல்வியாண்டின் டிசம்பர் 31–ஆம் தேதியின்படி, வயது கணக்கிடப்படும். ஒரு வீரர் ஒரு கல்வியாண்டில் ஒரே வயதுப்பிரிவில் கீழுள்ள அட்டவணையில் இடம்பெற்றுள்ள A பிரிவு, மற்றும் B பிரிவில் தலா ஒரு போட்டிகளிலும், பிரிவு C இல் ஏதேனும் 3 போட்டிகளில் (Events) பங்கேற்கலாம். (தொடரோட்டப் போட்டிகளைத் தவிர்த்து).

| **பழைய விளையாட்டுக்கள் (Group A Old Games)** | **புதிய விளையாட்டுக்கள் (Group B New Games) & Group D சதுரங்கப் போட்டிகள் (Chess Competitions)** | **தடகளப் போட்டிகள் (Group C Competitions)** |
|---|---|---|
| 12 – ல் ஏதேனும் ஒன்று மட்டும் | 12 +1 – மொத்தம் 13 இல் ஏதேனும் ஒன்று மட்டும் | ஏதேனும் 3 போட்டிகள் |
| குறிப்பு : ஒரே விளையாட்டின் ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகள் இரண்டிலும் ஒரு வீரர் பங்கேற்கலாம் | குறிப்பு: ஒரே விளையாட்டின் ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகள் இரண்டிலும் ஒரு வீரர் பங்கேற்கலாம் | குறிப்பு: 3 போட்டிகள் (தொடரோட்டப் போட்டிகளைத் தவிர்த்து) |

1. **குறுவட்ட அளவில் கலந்து கொள்ளும் அணிகள்/தனிநபர் போட்டிகளுக்கான நுழைவுப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டியவை.**

- தலைமையாசிரியர்/ முதல்வர் மற்றும் அணி மேலாளருடன் அணியினர் எடுத்துக் கொண்ட புகைப்படம் **(Team Entry Forms along with Team Photo Attestation)**
- புகைப்படத்துடன் கூடிய தனிநபர் அடையாளப் படிவம் **(Individual Photo Identity Form)**
- 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகள் தங்களின் **பிறப்பு சான்றிதழின்** நகல்,
- 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகள் தங்களின் **10ஆம் வகுப்பு மதிப்பெண்** சான்றிதழ் நகல்
- தலைமையாசிரியரால் கையொப்பமிட்ட 4 அசல்கள் (4 Original Coples) தயார் செய்து ஆசிரியர்கள் 3 பிரதிகளை குறுவட்ட செயலாளரிடம் ஒப்படைத்து விட்டு 1 பிரதியினை தன்வசம் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. குறுவட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று வருவாய் மாவட்ட அளவில் விளையாட தகுதி பெறும் அணிகளின் நுழைவுப் படிவங்களின் 2 பிரதியினை சார்ந்த குறுவட்டச் செயலர்கள் வருவாய் மாவட்டச் செயலாளர்களிடம் ஒப்படைத்து விட்டு 1 பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.

3. மேலும் வருவாய் மாவட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று மாநில அளவில் விளையாட தகுதி பெறும் அணிகளின் நுழைவுப் படிவங்களின் 1 பிரதியினை வருவாய் மாவட்டச் செயலர்கள் மாநில செயலாளரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.
4. குறுவட்ட மாவட்ட போட்டிகள் நடத்தும் பள்ளிகள் / அலுவலர்கள் நுழைவுப் படிவங்கள் (Entry Forms) எந்த கால கட்டத்திலும் சரிபார்க்கப்பட வேண்டி இருப்பதால், குறைந்த பட்சம் கடந்த 5 ஆண்டுகளின் அசல் நுழைவுப் படிவங்களுடன், தேவையான ஆவணங்களை பள்ளிகளில் உடற்கல்வி துறையின் கோப்பில் மிகவும் கவனமாக பாதுகாக்கப் படவேண்டும்.
5. மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெறும் அணிகளின் நுழைவுப் படிவங்கள் மற்றும் புகைப்படங்கள் (Team/Individual Entry Forms along with Team Photo/Individual Idendity Form with Photo) அளவிலான போட்டிகளை நடத்தும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகத்தால் பாதுகாக்கப்படவேண்டும். மேலும், மேற்காண் ஆவணங்களை தேவைப்படும் நேரத்தில் ஆதாரமாக சமர்ப்பிக்க வேண்டும்.
6. ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் ஜூலை 1-ம்தேதி அன்று அமலில் இருக்கும் விதிகள் (Rules) பின்பற்றப்படும்.
7. குறுவட்டம் முதல் மாநிலம் வரை அனைத்து நிலைகளிலும் (From Zonal Level to State Level) போட்டிகளின் வெற்றியாளர்களைத் தீர்மானிக்க "நாக் அவுட்" (Knock-out) முறை பின்பற்றப்படும்.
8. வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகள் முதல் மாநில அளவிலான போட்டிகள் வரை முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பிடித்த அணிகளுக்கு முன்னுரிமை **Seeding** வழங்கப்படும். தனிநபர் போட்டிகளுக்கு **Seeding, Ranking & Rating** வழங்கப்படமாட்டாது. சதுரங்கப் போட்டிகள் **Swiss Paring** முறையில் நடத்தப்பட வேண்டும்.
9. கடற்கரை கையுந்துபந்து போட்டிகள் நடைபெற்று கொண்டிருக்கும் போது மாற்று ஆட்டக்காரர்களுக்கு அனுமதியில்லை, அடுத்த சுற்றுப் போட்டிகளுக்கு அனுமதியளிக்கலாம். ஒரு அணியில் ஒரு வீரருக்கு போட்டிகளின் போது தொடர்ந்து விளையாட முடியாத சூழல் எற்பட்டால் FIVB யின் விதிகளின்படி முடிவு அறிவிக்கப்படும்.
10. போட்டிகளில் பங்கு பெறும் அணிகள் போட்டி ஆரம்பிப்பதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பாக போட்டி நடக்கும் இடத்திற்கு வருகை புரிதல் வேண்டும்.
11. அணிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தாலோ, குறிப்பிட்ட கால நேரத்திற்குள் போட்டிகளை முடிக்க முடியவில்லை என்றாலோ, போட்டிகளின் கால அளவு (Duration), செட்களின் எண்ணிக்கை (Number of Sets), சுற்றுகளின் கால அளவு (Duration of the Rounds) போன்றவற்றை போட்டி நடத்துபவர்கள் சூழ்நிலைக்கேற்ப மாற்றம் செய்து கொள்ளலாம்.

**அணி மேலாளர்கள் பணிகள் மற்றும் பொறுப்புகள்:**

1. உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர் மட்டுமே அணி மேலாளராக செயல்படலாம்.
2. பிற பாடஆசிரியர் அணி மேலாளராக வர நேர்ந்தால், சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியரிடம் அனுமதி கடிதம் பெற்று வர வேண்டும்.
3. மாணவ / மாணவியரின் பெற்றோர் / பயிற்சியாளர் (Parent/Coach) அணி மேலாளராக செயல்பட அனுமதிக்கப்பட மாட்டாது.
4. போட்டிகளுக்கு பாதுகாப்பாக அழைத்து வருவது, போட்டி நடைபெறும் இடங்களில் மாணவர்களை தனது முழு கண்காணிப்பில் வைத்துக் கொள்வது, போட்டிகள் முடிந்தவுடன் மாணவர்களை பாதுகாப்பாக திரும்ப அழைத்துச் செல்வது முதலியன அணி மேலாளரின் தலையாய கடமையாகும்.
5. அனைத்து நிலை போட்டிகளில் (from Zonal Level to State Level) பங்குபெறும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு நலனில் அணி மேலாளர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்.
6. பாரதியார் தின / குடியரசு தினப் போட்டிகள் (BD / RD Competitions), குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS) மற்றும் சதுரங்கப் போட்டிகளுக்கு சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் நியமிக்கப்படும் நபர்கள் மட்டும் அணி மேலாளராக அனுமதிக்கப்படுவார்.
7. மாணவ / மாணவிகளின் பாதுகாப்பு நலன் கருதி, அணி மேலாளர்கள் மாணவ மாணவியர்களை நீர்நிலை இருக்கும் இடங்களுக்கோ, சுற்றுலாத்தளங்களுக்கோ மற்றும் ஆபத்து மிகுந்த இடங்களுக்கோ அழைத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

**புகார் மனு (Protest Letter) – வழிமுறைகள்**

1. ஒரு அணியினர் தங்கள் அணி விளையாடுகின்ற போது எதிர்த்து விளையாடும் அணியினர் மீது சந்தேகம் இருப்பின் அந்த அணியினர் மீது மட்டுமே புகார் அளிக்கலாம்.
2. பள்ளிக் கல்வித் துறை மூலம் பெறப்படும் ஆவணங்களை மட்டுமே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.
3. ஆய்வுக்குழுவின் மூலம் ஆவணங்கள் சரிப்பார்க்கப்பட்டு அவை முறைகேடுகள் நிரூபிக்கப்பட்டால் தொடர்புடைய அணி வெற்றி பெற்று இருப்பின் சான்றிதழ்கள், கோப்பைகள் திரும்பப் பெறப்படும். மேலும் சார்ந்த பள்ளி உடற்கல்வி இயக்குநர்கள்/உடற்கல்வி ஆசிரியர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.
4. போட்டிகள் சரியானமுறையில் நடந்து கொண்டிருக்கையில், தேவையில்லாத புகார்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. ஆனால், எதிரணியினர் முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தால், அதற்கான தகுந்த ஆதாரங்களுடன் போட்டிகள் நிறைவுற்று 30 நிமிடத்திற்குள் புகார் கட்டணத்துடன் புகாரளிக்கலாம்.
6. இந்த நிலையில், போட்டி நடத்துபவர்கள் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளருடன் கலந்தாலோசித்து, புகாருக்குள்ளான அணி மேலாளரிடம் முறைகேடு செய்ததற்கான எழுத்துப் பூர்வ ஒப்புதலைப் பெற்றுக்கொண்டு ஆய்வுக்கு பின் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.
7. ஒருவேளை, புகாருக்குள்ளான அணி மேலாளர் தன் மேல் சுமத்தப்பட்ட புகாரினை வாய்மொழியாகவோ / எழுத்துப் பூர்வமாகவோ மறுத்து போட்டிகள் தொடரும் பட்சத்தில், பின்னாளில் புகார் நிரூபிக்கப்படுமானால், அவர் மீது துறை சார்ந்த கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.
8. குறுவட்ட அளவில் ரூ.1000–ம், வருவாய் மாவட்ட அளவில் ரூ.2,000–ம், மாநில அளவில் ரூ.5000–ம், புகார் கட்டணமாக செலுத்திய பிறகு புகார் ஏற்றுக் கொள்ளப்படும்
9. புகார் தொகை, புகார் சம்பந்தப்பட்ட பள்ளி பதிவேடுகள் மற்றும் பிற ஆவணங்களை சரிபார்ப்பதற்காக நியமிக்கப்படும் நபர்களுக்கான போக்குவரத்து மற்றும் பிற செலவுகளுக்காக பயன்படுத்தப்படும்.
10. மாணவர்களின் பிறந்த தேதியில் மாற்றம், ஆள்மாறாட்டம், மற்றும் தடகளப் போட்டிகளின் போது ஊக்க மருந்து பயன்படுத்துதல் போன்ற முறைகேடுகளில் ஈடுபடும் பள்ளிகள் மற்றும் மாணவ / மாணவியர்களை போட்டிகளிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதோடு, எதிர்வரும் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து 3 ஆண்டுகள் வரை அப்பள்ளியிலிருந்து அனைத்து வகையான விளையாட்டுப் போட்டிகளிலிலும் பங்கேற்க தடை செய்யப்படும். மேலும், முறைகேடுகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான துறைசார்ந்த நடவடிக்கை எடுக்கப்படும்.
11. சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மூலமாக பிறந்த தேதியில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டிருந்தால், போட்டிகள் தொடங்குவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரால் (DEO) முறையாக அங்கீகரிக்கப்பட்டு, ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். (பள்ளிக்கல்வி இயக்குநரகத்தின் விதிமுறைகளின்படி பிறந்ததேதி மாற்றம் பொருந்தும்).
12. இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமத்தின் (SGFI) விதிகளின்படி, தேவையிருப்பின், அனைத்து நிலைகளிலும் (From Zonal to State Level) போட்டி நடத்துபவர்கள் போட்டியில் பங்கு பெறும் மாணவ மாணவியர்களுக்கு மருத்துவக்குழுவினரைக் கொண்டு ஊக்க மருந்து தடை பரிசோதனை செய்துகொள்ளலாம்.
13. அனைத்து போட்டிகளிலும் நடுவர்களின் முடிவே இறுதியானது.

## 13. பெண் குழந்தைகள் பாதுகாப்பு

குறுவட்டப் போட்டிகள் முதல் தேசிய போட்டிகள் வரை செல்லும் மாணவியர் அணி மற்றும் அணி மேளாலர் விவரங்களை மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் தொகுத்து மாணவியரின் பாதுகாப்பு சார்ந்த பின்வரும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்

1. பள்ளிக்கல்வித்துறையின் விளையாட்டுப் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவிகளின் பெற்றோர்களிடமிருந்து அனுமதி கடிதம் தலைமை ஆசிரியர்கள் பெற்றிருக்கவேண்டும்.
2. பெற்றோர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சிகள் வழங்கும் நாட்கள், மற்றும் நேர விவரங்களையும் குறுவட்டப் போட்டிகள் நடைபெறும் இடம் , நாள் மற்றும் அணிமேலாளர்கள் விவரங்களும் இடபெற்றிருக்கவேண்டும்.
3. போட்டிகளுக்கு செல்லும் முன் பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். போக்சோ சட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
4. பாலியல் துன்புறுத்தல் பற்றிய புரிதல், அதை தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் பாதிக்கப்படும்போது உதவி பெறுவது போன்ற விழிப்புணர்வை பள்ளியிலேயே ஏற்படுத்தி விளையாட்டுப் போட்டிகளுக்கு அழைத்து வருதல் வேண்டும்.
5. மாணவியர்களுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் பெண் உடற்கல்வி ஆசிரியைகளே அணி மேலாளர்களாக பணியாற்ற வேண்டும்.
6. பெண் உடற்கல்வி ஆசிரியை இல்லாத பட்சத்தில் பெண் பாட ஆசிரியைகளை உடன் அழைத்து வர அறிவுறுத்தப்பட வேண்டும்.
7. மாநில அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் பெண் உடற்கல்வி ஆசிரியைகளே மாணவியர்களோடு தங்குதல் வேண்டும்.
8. மாநில அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் எக்காரணம் கொண்டும் ஆண் உடற்கல்வி ஆசிரியர்கள் / இதர பாட ஆண் ஆசிரியர்கள் மாணவியர்களோடு தங்குதல் கூடாது.
9. தனியார் ஆண் பயிற்றுநர்களை மாண்வியர்கள் அணிகளோடு பயணிக்கவோ அல்லது தங்கவோ அனுமதித்தல் கூடாது.
10. விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்களைத் தவிர மாணவியர்களை வெளி இடங்களுக்கு அழைத்துச் செல்ல அனுமதி கிடையாது.
11. நீர் நிலைகள் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்கு மாணவியர்களை அழைத்துத் செல்வது தடை செய்யப்படுகிறது.
12. எனவே, தங்களது அணியினருக்கான விளையாட்டுப் போட்டிகள் முடிந்தவுடன் பாதுகாப்பாக மாணவியர்களை திரும்ப அழைத்துச் செல்ல வேண்டியது சார்ந்த அணி மேலாளரின் கடமையாகும்.

13. 14–வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகள் போட்டிகளில் கலந்துகொள்ளும்போது குழைந்தைகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.
14. மாணவியர்கள் தங்கும் இடங்களில் பாதுகாப்பு தொடர்பான அனைத்து வசதிகளையும் ஒவ்வொரு நிலைகளிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழுக்கள் மேற்பார்வையிட்டு உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்.
15. போட்டி நடத்தும் பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்துள்ள தங்கும் இடங்களில் மட்டுமே மாணவிகள் மற்றும் அணிமேலாளர்கள் தங்க வேண்டும்.

மேலும் இத்துடன் இணைத்தனுப்பப்படும் பெண் குழந்தைகளை பாதுகாப்பதற்கான நிலையான வழிகாட்டு முறையை பின்பற்ற வேண்டும்.

**14. இந்திய பள்ளிகளுக்கான விளையாட்டு கூட்டமைப்பு (SGFI) நடத்தும் போட்டிகளில் பங்குபெறுதல்**

1. தேசிய பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தும் வகையில் பள்ளி மாணவர்கள் பல்வேறு விளையாட்டுத் துறைகளில் பங்கேற்பதற்காக உள்ள ஒரே அதிகாரபூர்வ அமைப்பு SGFI மட்டுமே என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.
2. சர்வதேச அளவில் NSF – ஆல் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட விளையாட்டுப் போட்டிகளில் பள்ளி மாணவ மாணவிகள் ISF/ASSF போட்டிகளில் பங்கேற்க அனுமதி வழங்குவதற்கு SGFI க்கு மட்டுமே உரிமை உள்ளது.
3. எந்த ஒரு SGFI UNIT–ம் சர்வதேசப் போட்டிகளில் நேரடியாக (ISF/ASSF) பங்கேற்ற பின், அந்த UNIT–ம் மாணவர்களின் சான்றிதழ்கள் செல்லுபடியாகாது மற்றும் அங்கீகரிக்கபடாததாக அறிவிக்கப்படும்.
4. SGFI யின் மேற்கண்ட விதிகளுக்கு எந்தவொரு UNIT ம் எதிராகச் செல்வதாகக் கண்டறியப்பட்டால் அந்த UNIT சட்டப்பூர்வ சிக்கல்களுக்கும் பொறுப்பாகும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.
5. மாணவ / மாணவியர்கள் தாங்கள் தெரிவு செய்யப்பட்ட எடைப் பிரிவில், எடைக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருப்பின் அவர்களுக்கு தேசிய போட்டியில் பங்கேற்க அனுமதி மறுக்கப்படுதுடன், பங்கேற்புச் சான்றிதழும் தேசிய போட்டியில் வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
6. தெரிவுப் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக போட்டியாளர்கள் தலைமையாசிரியரின் கையொப்பமிட்ட, புகைப்படத்துடன் கூடிய கீழ்கண்ட படிவங்களை முழுமையாக சமர்ப்பித்தால் மட்டுமே SGFI மண்டல மற்றும் மாநில தெரிவுப்போட்டிகளில் அனுமதிக்கப்படுவார்கள்
    - SGFI Eligibility Form
    - ஆதார் அட்டை நகல்
    - பிறப்பிடச் சான்றிதல் நகல்
    - பிறப்பு சான்றிதழ் நகல்
    - 11 –ஆம் மற்றும் 12 –ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு 10 –ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல்.

- மாணவ / மாணவியர்கள் பெயரில் உள்ள வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல்.
- பெற்றோர் அனுமதிக்கடிதம்.
- உடற்தகுதி சான்றிதல்

7. பாரதியார் தின, குடியரசுதின பழைய விளையாட்டுப் போட்டிகளுக்கு மட்டும் மண்டலம் மற்றும் மாநில அளவிலான தெரிவுப் போட்டிகள் நடத்தி, தெரிவுபெற்ற மாணவ / மாணவியர்கள் இந்திய பள்ளிகளுக்கான விளையாட்டு கூட்டமைப்பு (SGFI) நடத்தும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெறுவர்.
8. மாநில அளவில் நடைபெறும் பாரதியார் தின, குடியரசுதின கீழ்கண்ட புதிய விளையாட்டுக்கள், சதுரங்கம் மற்றும் தடகள போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ / மாணவியர்கள் நேரடியாக இந்திய பள்ளிகளுக்கான விளையாட்டு கூட்டமைப்பு (SGFI) நடத்தும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெறுவர். இவ்வகையான விளையாட்டுக்களுக்கு தனியாக தெரிவுப் போட்டிகள் நடைபெறாது.
    - நீச்சல் (Swimming)
    - டேக்வாண்டோ (Taekwondo)
    - ஜூடோ (Judo)
    - குத்துச்சண்டை (Boxing)
    - ஜிம்னாஸ்டிக் (Gymnastic)
    - சாலையோர மிதிவண்டி (Road Cycling)
    - வாள்சண்டை (Fencing)
    - ஸ்குவாஷ் (Squash)–ஸ்குவாஷ் ஒற்றையர் போட்டியில் முதல் 5 இடங்கள் பெறுபவர்களை தேர்வு செய்து தேசிய போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.
    - கடற்கரை கையுந்துபந்து (Beach Volleyball) - கடற்கரை கையுந்துபந்து தேசிய போட்டிக்கான அணியானது மாநில போட்டிகள் நடைபெறும் இடத்தில் தெரிவு குழு அமைத்து தெரிவுசெய்யப்படும்.

9. தெரிவுப் போட்டிகள் நடைபெறும் விவரத்தை சுற்றறிக்கையாக சார்ந்த மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் தெரியப்படுத்துதல் வேண்டும்.
10. ஒரு மாணவர் / மாணவி ஒரே வயதுப்பிரிவில் மூன்று வருடங்களுக்கு மேல் தேசியப் போட்டிகளில் பங்கேற்க இயலாது. குறுவட்டம் முதல் மாநிலப் போட்டிகள் வரை எந்த வயதுப் பிரிவில் கலந்து கொண்டார்களோ, அதே வயதுப் பிரிவில் தான் SGFI மாநில தெரிவுப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்.
11. பள்ளிக் கல்வித் துறையினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட வயதுப்பிரிவில் மட்டுமே தேசியப் போட்டிகளிலும் கலந்து கொள்ள இயலும்.
12. தெரிவுப் போட்டிகளில் திறமையும், அனுபவமுள்ள நடுவர்கள் / தேர்வர்களை கொண்ட தெரிவுக் குழுக்களை சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் அமைத்திட வேண்டும்.

13. தெரிவுப் போட்டிகளுக்கான குழுவில், தமிழக பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த திறமையான, அனுபவமுள்ள உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர்களை நியமித்திட வேண்டும்.
14. விளையாட்டு வீரர் / வீராங்கனைகளை விளையாட்டுத் திறமையின் அடிப்படையில் மட்டுமே தெரிவு செய்தல் வேண்டும்.
15. தெரிவுப் போட்டிகள் துவங்குவதற்கு முன் பங்கேற்பவர்களிடம் வெளிப்படையாக எம்முறையில் தெரிவு நடத்தப்படும் என்ற விவரத்தினை தெளிவுபடுத்த வேண்டும்
16. தெரிவு போட்டியில் பங்கேற்பவர்களுக்கு தெரிவு போட்டியின் போது திறமையை வெளிக்காட்ட சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.
17. தெரிவு போட்டியின் போது தெரிவுக் குழு உறுப்பினர்கள் அலைபேசியை கண்டிப்பாக உபயோகிக்கக் கூடாது.
18. தெரிவுக் குழுக்களின் உறுப்பினர்கள் எவ்வித புறத் தூண்டுதலுக்கும் இடம் கொடுக்காமல் நியாயமான முறையில் தெரிவுகளை நடத்த வேண்டும்.
19. தெரிவு போட்டி சார்ந்த நடைமுறை விவரங்களை தெரிவுக் குழு உறுப்பினர்களுக்கு, போட்டிகளை நடத்துவதற்கு முன்னதாகவே சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் தெளிவு படுத்துதல் வேண்டும்.
20. ஆவணங்களை சரிபார்க்கும் பொழுது அரசாணை எண். 40, பள்ளிக் கல்வித் துறை, நாள் 21.02.2012–ன் படி தமிழ்நாடு மாநில கல்வித் துறையின் நிர்வாகத்திற்குட்பட்ட அரசு, அரசு உதவி பெறும், நகராட்சி, மாநகராட்சி, மெட்ரிக்குலேஷன், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை மட்டுமே தெரிவு போட்டியில் பங்கேற்க அனுமதி வழங்க வேண்டும்.
21. மண்டல அளவிலான தெரிவுப் போட்டிகளில் தனிநபர் போட்டிகள் தவிர்த்து, குழுப் போட்டிகளுக்கு ஒரு மண்டலத்தில் முதன்மை வீரர்களுக்கான எண்ணிக்கயில் மட்டுமே மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
22. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் தெரிவுப் போட்டிகள் முடிந்தவுடன் அன்றைய தினமே தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முறையான தெரிவாண்ணையை உரிய படிவத்தில் வழங்க வேண்டும்.
23. முதல் 3 வீரர் / வீராங்கனைகளின் காத்திருப்போர் (Standby list) பட்டியலையும் தெரிவுப் போட்டி நிறைவு பெற்ற அன்றைய தினமே வெளிப்படையாக அறிவித்தல் வேண்டும். காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு எவ்வித எழுத்து பூர்வமான ஆணைகளும் வழங்கப்படக் கூடாது.
24. தெரிவாணையில் அடுத்த கட்ட தெரிவுப் போட்டிகள் நடைபெறும் இடம் / பயிற்சி முகாம் / தொடர்பு அலுவலர் பெயர் மற்றும் அலைபேசி எண் / தேசிய போட்டிகள் நடைபெறும் இடம் சார்பான விவரங்கள் முழுமையாக தெரிவிக்கப்பட வேண்டும்.
25. தெரிவுபோட்டிகள் நடத்திட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மையங்களில் சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் தெரிவுப் போட்டிகளுக்கு முழுப் பொறுப்பாவார்கள்.
26. தெரிவுப் போட்டிகளை நடத்தும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் தெரிவுப் போட்டியில் பங்கேற்கும் மாணவ / மாணவியருக்கு தங்குமிட வசதி செய்திடல் வேண்டும்.

27. தெரிவுப் போட்டி முடிந்தவுடன் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரப்பட்டியலை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாநில முதன்மை உடற்கல்வி ஆய்வாளருக்கு மின்னஞ்சல் மற்றும் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
28. அனைத்து போட்டிகளிலும் நடுவர்களின் முடிவே இறுதியானது.

## 15. பயண மற்றும் பஞ்சபடி (TA & DA) பெறத் தகுதி :

1. குடியரசு தின, பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் மற்றும் குடியரசு தின தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ளும் ஒரு பள்ளி அணியின் வீரர்கள் மற்றும் அணி மேலாளர்கள் குறுவட்ட மற்றும் வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகள் வரை தங்களது பயணப் படி, உணவு மற்றும் இதர செலவீனங்களை பள்ளி பொது நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒரு அணி மேலாளர் அதிகபட்சம் 20 மாணவர்களை போட்டிகளுக்கு அழைத்துச் செல்லத் தகுதியானவர். மாணவர்களின் எண்ணிக்கை 20க்கு மேல் இருந்தால், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றார்போல் கூடுதல் அணி மேலாளர்கள் மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டும்.
2. இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் கூட்டமைப்பு (SGFI) நடத்தும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள மண்டல மற்றும் மாநில அளவிலான தெரிவுப்போட்டிகளில் பங்கேற்பதற்கான பயணப் படி, உணவு மற்றும் இதர செலவினங்களை சார்ந்த பள்ளி பொது நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டும். இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமத்தின் (SGFI) பழைய விதிமுறைகளின்படி, ஒவ்வொரு அணி மாணவரும் மற்றும் அணி மேலாளரும் தங்களுக்கு செலவாகும் பயணப்படியுடன், கூடுதலாக ரூ.125/-ஐ (அதிகபட்சம்) ஒரு நாள் உணவுச் செலவாக சார்ந்த பள்ளி பொது நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
3. மாநில அளவிலான குடியரசு தின/ பாரதியார் தின பழைய விளையாட்டுப் போட்டிகள் (RDG, BDG), பாரதியார் தின/ குடியரசு தின புதிய விளையாட்டுப் போட்டிகள்(BD RD Competitions), குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS) , சதுரங்கப் போட்டிகள் மற்றும் இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் கூட்டமைப்பு நடத்தும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவ/மாணவியர்கள் மற்றும் அவர்களை அழைத்துச் செல்லும் ஆசிரியர்கள் பயணப்படி மற்றும் பஞ்சப்படி (உணவுக்கான செலவுகள்) (TA & DA) பெறத் தகுதியானவர்கள்.

## 16.பாரதியார் தின/ குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் (எடைப் பிரிவுகள்)

பாரதியார் தின/ குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளுக்கு (BDG/RDG, BD/RD Competitions) கீழ்கண்ட எடைப் பிரிவுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ஒரு கல்வி ஆண்டில் குறுவட்டம் முதல் மாநில அளவிலான போட்டிகள் வரை அதே எடைப் பிரிவுகள் தொடரும், போட்டி நடைபெறும் இடங்களில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் அங்கீகரிக்கப்பட்ட எடை இயந்திரங்களாக இருக்கவேண்டும்.

## கபடி

| மாணவர்கள் | கள அளவீடு | மாணவிகள் | கள அளவீடு |
|---|---|---|---|
| 14 – வயதிற்கு உட்பட்டவர்கள் **51 கிலோ வரை** | 11 மீ x 8 மீ | 14 – வயதிற்கு உட்பட்டவர்கள் **48 கிலோ வரை** | 11 மீ x 8 மீ |
| 17 – வயதிற்கு உட்பட்டவர்கள் **55 கிலோ வரை** | 12 மீ x 8 மீ | 17 – வயதிற்கு உட்பட்டவர்கள் **55 கிலோ வரை** | 12 மீ x 8 மீ |
| 19 – வயதிற்கு உட்பட்டவர்கள் **70 கிலோ வரை** | 13 மீ x 10 மீ | 19 – வயதிற்கு உட்பட்டவர்கள் **65 கிலோ வரை** | 12 மீ x 8 மீ |

## சாலையோர மிதிவண்டி

| வ.எண் | பிரிவுகள் | போட்டி தூரம் |
|---|---|---|
| 1 | 14 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் | 10 கிலோ மீட்டர் |
| 2 | 17 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் | 20 கிலோ மீட்டர் |
| 3 | 19 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் | 30 கிலோ மீட்டர் |
| 4 | 14 வயதிற்கு உட்பட்ட மாணவிகள் | 5 கிலோ மீட்டர் |
| 5 | 17 வயதிற்கு உட்பட்ட மாணவிகள் | 10 கிலோ மீட்டர் |
| 6 | 19 வயதிற்கு உட்பட்ட மாணவிகள் | 15 கிலோ மீட்டர் |

## சிலம்பம் – எடைப் பிரிவுகள்

| மாணவர்கள் | | | மாணவிகள் | | |
|---|---|---|---|---|---|
| 14 – வ.உ | 17 – வ.உ | 19 – வ.உ | 14 – வ.உ | 17 – வ.உ | 19 – வ.உ |
| கம்புச் சண்டை ( 30 – க்கு கீழ் ) | கம்புச் சண்டை (30 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (45 – க்கு கீழ் | கம்புச் சண்டை (30 – க்கு கீழ் | கம்புச் சண்டை (30 – க்கு கீழ் | கம்புச் சண்டை (45 – க்கு கீழ் |
| கம்புச் சண்டை (35 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (35 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (50 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (35 – க்கு கீழ்)) | கம்புச் சண்டை (35 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (50 – க்கு கீழ்) |
| கம்புச் சண்டை (40 – க்கு கீழ் | கம்புச் சண்டை (40 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (55 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (40 – க்கு கீழ் | கம்புச் சண்டை (40 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (55 – க்கு கீழ்) |
| கம்புச் சண்டை (40 மற்றும் 40 – மேல் ) | கம்புச் சண்டை (45 – க்கு கீழ் | கம்புச் சண்டை (60 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (40 மற்றும் 40 – மேல் ) | கம்புச் சண்டை (45 – க்கு கீழ் | கம்புச் சண்டை (60 – க்கு கீழ்) |
| ஒற்றைக் கம்பு வீச்சு | கம்புச் சண்டை (50 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (70 – க்கு கீழ்) | ஒற்றைக் கம்பு வீச்சு | கம்புச் சண்டை (50 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (70 – க்கு கீழ்) |
| இரட்டைக் கம்பு வீச்சு | கம்புச் சண்டை (60 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (70 மற்றும் 70 – மேல் ) | இரட்டைக் கம்பு வீச்சு | கம்புச் சண்டை (60 – க்கு கீழ்) | கம்புச் சண்டை (70 மற்றும் 70 – மேல் ) |
| ----------- | கம்புச் சண்டை (60 மற்றும் 60 – மேல் ) | ஒற்றைக் கம்பு வீச்சு | ----------- | கம்புச் சண்டை (60 மற்றும் 60 – மேல் ) | ஒற்றைக் கம்பு வீச்சு |
| ----------- | ஒற்றைக் கம்பு வீச்சு | இரட்டைக் கம்பு வீச்சு | ----------- | ஒற்றைக் கம்பு வீச்சு | இரட்டைக் கம்பு வீச்சு |
| ----------- | இரட்டைக் கம்பு வீச்சு | ----------- | ----------- | இரட்டைக் கம்பு வீச்சு | ----------- |

# டேக்வாண்டோ – எடைப் பிரிவுகள்

| மாணவர்கள் | | | மாணவிகள் | | |
|---|---|---|---|---|---|
| 14 – வ.உ | 17 – வ.உ | 19 – வ.உ | 14 – வ.உ | 17 – வ.உ | 19 – வ.உ |
| 18 கிலோவிற்கு கீழ் | 35 கிலோவிற்கு கீழ் | 45 கிலோவிற்கு கீழ் | 16 கிலோவிற்கு கீழ் | 32 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் |
| 18 முதல் 21 – க்கு கீழ் வரை | 35 முதல் 38 – க்கு கீழ் வரை | 45 முதல் 48 – க்கு கீழ் வரை | 16 முதல் 18 – க்கு கீழ் வரை | 32 முதல் 35 – க்கு கீழ் வரை | 40 முதல் 42 – க்கு கீழ் வரை |
| 21 முதல் 23 – க்கு கீழ் வரை | 38 முதல் 41 – க்கு கீழ் வரை | 48 முதல் 51 – க்கு கீழ் வரை | 18 முதல் 20 – க்கு கீழ் வரை | 35 முதல் 38– க்கு கீழ் வரை | 42 முதல் 44 – க்கு கீழ் வரை |
| 23 முதல் 25 – க்கு கீழ் வரை | 41 முதல் 45 – க்கு கீழ் வரை | 51 முதல் 55 – க்கு கீழ் வரை | 20 முதல் 22 – க்கு கீழ் வரை | 38 முதல் 42 – க்கு கீழ் வரை | 44 முதல் 46 – க்கு கீழ் வரை |
| 25 முதல் 27 – க்கு கீழ் வரை | 45 முதல் 48 – க்கு கீழ் வரை | 55 முதல் 59 – க்கு கீழ் வரை | 22 முதல் 24 – க்கு கீழ் வரை | 42 முதல் 44 – க்கு கீழ் வரை | 46 முதல் 49 – க்கு கீழ் வரை |
| 27 முதல் 29 – க்கு கீழ் வரை | 48 முதல் 51 – க்கு கீழ் வரை | 59 முதல் 63 – க்கு கீழ் வரை | 24 முதல் 26 – க்கு கீழ் வரை | 44 முதல் 46 – க்கு கீழ் வரை | 49 முதல் 52 – க்கு கீழ் வரை |
| 29 முதல் 32 – க்கு கீழ் வரை | 51 முதல் 55 – க்கு கீழ் வரை | 63 முதல் 68 – க்கு கீழ் வரை | 26 முதல் 29 – க்கு கீழ் வரை | 46 முதல் 49 – க்கு கீழ் வரை | 52 முதல் 55 – க்கு கீழ் வரை |
| 32 முதல் 35 – க்கு கீழ் வரை | 55 முதல் 59 – க்கு கீழ் வரை | 68 முதல் 73 – க்கு கீழ் வரை | 29 முதல் 32 – க்கு கீழ் வரை | 49 முதல் 52 – க்கு கீழ் வரை | 55 முதல் 59 – க்கு கீழ் வரை |
| 35 முதல் 38 – க்கு கீழ் வரை | 59 முதல் 63– க்கு கீழ் வரை | 73 முதல் 78 – க்கு கீழ் வரை | 32 முதல் 35 – க்கு கீழ் வரை | 52 முதல் 55 – க்கு கீழ் வரை | 59 முதல் 63 – க்கு கீழ் வரை |
| 38 முதல் 41 – க்கு கீழ் வரை | 63 முதல் 68 – க்கு கீழ் வரை | 78 மற்றும் 78 – க்கு மேல் | 35 முதல் 38 – க்கு கீழ் வரை | 55 முதல் 59 – க்கு கீழ் வரை | 63 முதல் 68 – க்கு கீழ் வரை |
| 41 மற்றும் 41 – க்கு மேல் | 68 முதல் 73 – க்கு கீழ் வரை | ---------- | 38 மற்றும் 38 – க்கு மேல் | 59 முதல் 63 – க்கு கீழ் வரை | 68 மற்றும் 68 – க்கு மேல் |
| ---------- | 73 முதல் 78 – க்கு கீழ் வரை | ---------- | ---------- | 63 முதல் 68 – க்கு கீழ் வரை | ---------- |
| ---------- | 78 மற்றும் 78 – க்கு மேல் | ---------- | ---------- | 68 மற்றும் 68 – க்கு மேல் | ---------- |

## குத்துச்சண்டை – எடைப் பிரிவுகள்

| மாணவர்கள் | | | மாணவிகள் | | |
|---|---|---|---|---|---|
| 14 – வ.உ | 17 – வ.உ | 19 – வ.உ | 14 – வ.உ | 17 – வ.உ | 19 – வ.உ |
| 28 முதல் 30 – க்கு கீழ் வரை | 46 கிலோவிற்கு கீழ் | 46 கிலோவிற்கு கீழ் | 28 முதல் 30 – க்கு கீழ் வரை | 42 கிலோவிற்கு கீழ் | 45 கிலோவிற்கு கீழ் |
| 30 முதல் 32 – க்கு கீழ் வரை | 46 முதல் 48 – க்கு கீழ் வரை | 46 முதல் 49 – க்கு கீழ் வரை | 30 முதல் 32 – க்கு கீழ் வரை | 42 முதல் 44 – க்கு கீழ் வரை | 45 முதல் 48 – க்கு கீழ் வரை |
| 32 முதல் 34 – க்கு கீழ் வரை | 48 முதல் 50 – க்கு கீழ் வரை | 49 முதல் 52 – க்கு கீழ் வரை | 32 முதல் 34 – க்கு கீழ் வரை | 44 முதல் 46 – க்கு கீழ் வரை | 48 முதல் 51 – க்கு கீழ் வரை |
| 34 முதல் 36 – க்கு கீழ் வரை | 50 முதல் 52 – க்கு கீழ் வரை | 52 முதல் 56 – க்கு கீழ் வரை | 34 முதல் 36 – க்கு கீழ் வரை | 46 முதல் 48 – க்கு கீழ் வரை | 51 முதல் 54 – க்கு கீழ் வரை |
| 36 முதல் 38 – க்கு கீழ் வரை | 42 முதல் 54 – க்கு கீழ் வரை | 56 முதல் 60 – க்கு கீழ் வரை | 36 முதல் 38 – க்கு கீழ் வரை | 48 முதல் 50 – க்கு கீழ் வரை | 54 முதல் 57 – க்கு கீழ் வரை |
| 38 முதல் 40 – க்கு கீழ் வரை | 54 முதல் 57 – க்கு கீழ் வரை | 60 முதல் 64 – க்கு கீழ் வரை | 38 முதல் 40 – க்கு கீழ் வரை | 50 முதல் 52 – க்கு கீழ் வரை | 57 முதல் 60 – க்கு கீழ் வரை |
| 40 முதல் 42 – க்கு கீழ் வரை | 57 முதல் 60 – க்கு கீழ் வரை | 64 முதல் 69 – க்கு கீழ் வரை | 40 முதல் 42 – க்கு கீழ் வரை | 52 முதல் 54 – க்கு கீழ் வரை | 60 முதல் 64 – க்கு கீழ் வரை |
| 42 முதல் 44 – க்கு கீழ் வரை | 60 முதல் 63– க்கு கீழ் வரை | 69 முதல் 75 – க்கு கீழ் வரை | 42 முதல் 44 – க்கு கீழ் வரை | 54 முதல் 57 – க்கு கீழ் வரை | 64 முதல் 66 – க்கு கீழ் வரை |
| 44 முதல் 46 – க்கு கீழ் வரை | 63 முதல் 66 – க்கு கீழ் வரை | 75 முதல் 81 – க்கு கீழ் வரை | 44 முதல் 46 – க்கு கீழ் வரை | 57 முதல் 60 – க்கு கீழ் வரை | 66 முதல் 69 – க்கு கீழ் வரை |
| 46 முதல் 48 – க்கு கீழ் வரை | 66 முதல் 70 – க்கு கீழ் வரை | 81 மற்றும் 91 – க்கு மேல் | 46 முதல் 48 – க்கு கீழ் வரை | 60 முதல் 63 – க்கு கீழ் வரை | 69 முதல் 75 – க்கு கீழ் வரை |
| 48 முதல் 50 – க்கு கீழ் வரை | 70 முதல் 75 – க்கு கீழ் வரை | 91 மற்றும் 91 – க்கு மேல் | 48 முதல் 50 – க்கு கீழ் வரை | 63 முதல் 66 – க்கு கீழ் வரை | 75 மற்றும் 81 – க்கு மேல் |
| ---------- | 75 முதல் 80 – க்கு கீழ் வரை | ---------- | ---------- | 66 முதல் 70 – க்கு கீழ் வரை | 81 மற்றும் 81 – க்கு மேல் |
| ---------- | 80 மற்றும் 80 – க்கு மேல் | ---------- | ---------- | 70 முதல் 75 – க்கு கீழ் வரை | ---------- |
| ---------- | ------------ | ---------- | ---------- | 75 முதல் 80 – க்கு கீழ் வரை | ---------- |
| ---------- | ------------ | ---------- | ---------- | 80 மற்றும் 80 – க்கு மேல் | ---------- |

# ஜூடோ – எடைப் பிரிவுகள்

| மாணவர்கள் | | | மாணவிகள் | | |
|---|---|---|---|---|---|
| 14 – வ.உ | 17 – வ.உ | 19 – வ.உ | 14 – வ.உ | 17 – வ.உ | 19 – வ.உ |
| 25 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் | 23 கிலோவிற்கு கீழ் | 36 கிலோவிற்கு கீழ் | 36 கிலோவிற்கு கீழ் |
| 30 கிலோவிற்கு கீழ் | 45 கிலோவிற்கு கீழ் | 45 கிலோவிற்கு கீழ் | 27 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் |
| 35 கிலோவிற்கு கீழ் | 50 கிலோவிற்கு கீழ் | 50 கிலோவிற்கு கீழ் | 32 கிலோவிற்கு கீழ் | 44 கிலோவிற்கு கீழ் | 44 கிலோவிற்கு கீழ் |
| 40 கிலோவிற்கு கீழ் | 55 கிலோவிற்கு கீழ் | 55 கிலோவிற்கு கீழ் | 36 கிலோவிற்கு கீழ் | 48 கிலோவிற்கு கீழ் | 48 கிலோவிற்கு கீழ் |
| 45 கிலோவிற்கு கீழ் | 60 கிலோவிற்கு கீழ் | 60 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் | 52 கிலோவிற்கு கீழ் | 52 கிலோவிற்கு கீழ் |
| 50 கிலோவிற்கு கீழ் | 66 கிலோவிற்கு கீழ் | 66 கிலோவிற்கு கீழ் | 44 கிலோவிற்கு கீழ் | 57 கிலோவிற்கு கீழ் | 57 கிலோவிற்கு கீழ் |
| 50 கிலோ மற்றும் 50 கிலோவிற்கு மேல் | 73 கிலோவிற்கு கீழ் | 73 கிலோவிற்கு கீழ் | 44 கிலோ மற்றும் 44 கிலோவிற்கு மேல் | 63 கிலோவிற்கு கீழ் | 63 கிலோவிற்கு கீழ் |
| ------------ ------- | 81 கிலோவிற்கு கீழ் | 81 கிலோவிற்கு கீழ் | ------------ ------- | 70 கிலோவிற்கு கீழ் | 70 கிலோவிற்கு கீழ் |
| ------------ ------- | 90 கிலோவிற்கு கீழ் | 90 கிலோவிற்கு கீழ் | ------------ ------- | 70 கிலோ மற்றும் 70 கிலோவிற்கு மேல் | 70 கிலோ மற்றும் 70 கிலோவிற்கு மேல் |
| ------------ ------- | 90 கிலோ மற்றும் 90 கிலோவிற்கு மேல் | 90 கிலோ மற்றும் 90 கிலோவிற்கு மேல் | ------------ ------- | ------------ ------- | ------------ ------- |

இயக்குநர்